**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண். 148/2021**
**நாள் 01/09/2025 திங்கட்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பின் 1–வது சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டில் 54–வது பிரிவின் ஏற்ப்பாட்டின் படி சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – பழனி (DW1) | த/பெயர் – குப்பன் |
| வயது – 61 | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

சாட்சி ஆஜர் அவருடைய முதல் விசாரணையை பொருத்து. பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டது. அவர் மூலம் கீழ்க்கண்ட ஆவணங்கள் அவர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டன.

1. (1). 02.11.2006 முதல் 07.10.2020 தேதியிலான ரசீதுகள் (23 எண்ணிக்கை) பி.சா ஆ 1 ஆகவும்,

(2). 02.12.2006 முதல் 02.02.2021 வரையிலான மின்கட்டன அட்டைகள் (6 எண்ணிக்கை) பி.சா ஆ 2 ஆகவும்,

(3). 23.07.2019 முதல் 13.11.2020 வரையிலான பிரதிவாதி பெயரிலான டெலிவரி செலான் 4 எண்ணிக்கை பி.சா ஆ 3 ஆகவும்,

(4). ஜுலை 2021 தேசிய கொடி நாள் பணம் பெற்றதற்கான ரசீது பி.சா ஆ 4 ஆகவும்,

(5). 14.09.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பி.சா ஆ 5 ஆகவும்,

(6). அஞ்சல் ரசீதுகள் மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டை 3 எண்ணிக்கை பி.சா ஆ 6 ஆகவும்,

(7). 27.09.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பு பி.சா ஆ 7 ஆகவும்,

(8). 22.09.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பு பி.சா ஆ 8 ஆகவும்,

(9). 14.07.2021 தேதியிட்ட வாடகை ஒப்பந்தம் பி.சா ஆ 9 ஆகவும்,

(10). 14.06.2022 தேதியிட்ட பி.சா ஆ 9ல் குறிப்பிடபட்டுள்ள வாடகை ஒப்பந்தம் நீட்டிப்பு குறிப்பு பி.சா ஆ 10 ஆகவும்,

(11). புகைப்படங்கள் (4 எண்ணிக்கை) மற்றும் குறுந்தகடு பி.சா ஆ 11 ஆகவும்,

(12). பிரதிவாதி பெயரில் உள்ள டெலிவரி செலான் 2 எண்ணிக்கை பி.சா ஆ 12 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

பி.சா ஆ 4ல் சம்மந்தப்பட்ட அலுவலகத்தின் முத்திரை இல்லை எனவும், பி.சா ஆ 9 மற்றும் 10 பதிவு செய்யபடாத ஆவணங்கள் என்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**(குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கபடுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**